# நொவெம்பர்– 30 – வெள்ளி

## தூய அந்திரேயா – திருத்தூதர்

**“அறிவிப்பதைக் கேட்டால் தான் நம்பிக்கை உண்டாகும். கிறிஸ்துவைப் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால் தான் அதைக் கேட்க வாய்ப்புண்டு”. *உரோ. 10:17***

## முதல் வாசகம் : உரோமையர் 10 : 9 - 18

சகோதர சகோதரிகளே!, ”இயேசு ஆண்டவர்” என வாயார அறிக்கையிட்டு, இறந்த அவரைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார் என நீங்கள் உள்ளூர நம்பினால் மீட்புப் பெறுவீர்கள். இவ்வாறு உள்ளூர நம்புவோர் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவர் வாயார அறிக்கையிடுவோர் மீட்புப் பெறுவர்.ஏனெனில், ”அவர் மீது நம்பிக்கை கொண்டோர் வெட்கத்திற்கு உள்ளாகமாட்டார்” என்பது மறைநூல் கூற்று.இதில் யூதர் என்றோ, கிரேக்கர் என்றோ வேறுபாடில்லை. அனைவருக்கும் ஆண்டவர் ஒருவரே. அவரை நோக்கி மன்றாடும் யாவருக்கும் அவர் அளவற்ற நலன்களைப் பொழிகிறார்.”ஆண்டவரின் திருப்பெயரை அறிக்கையிட்டு மன்றாடுகிறவர் எவரும் மீட்புப் பெறுவர்” என்று எழுதியுள்ளது அல்லவா?ஆனால், அவர்மீது நம்பிக்கை கொண்டிருந்தாலன்றி, அவர்கள் எவ்வாறு அவரை நோக்கி மன்றாடுவார்கள்? தாங்கள் கேள்வியுறாத ஒருவர்மீது எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள்? அறிவிக்கப்படாத ஒன்றுபற்றி அவர்கள் எவ்வாறு கேள்வியுறுவார்கள்?. அனுப்பப்படாமல் அவர்கள் எவ்வாறு அறிவிப்பார்கள்? இதைப்பற்றியே, ”நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன” என்று மறைநூலில் எழுதியுள்ளது. ஆயினும், எல்லாருமே நற்செய்தியை ஏற்றுக் கொள்ளவில்லை. இதைக் குறித்தே எசாயா, ”ஆண்டவரே, நாங்கள் அறிவித்ததை நம்பியவர் யார்?” என்று முறையிடுகிறார். ஆகவே, அறிவிப்பதைக் கேட்டால்தான் நம்பிக்கை உண்டாகும். கிறிஸ்துவைப் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால் தான் அதைக்கேட்க வாய்ப்புண்டு.அப்படியானால், அவர்கள் கேள்விப்படவில்லை என்று சொல்ல முடியுமோ? எப்படிச் சொல்லமுடியும்? ஏனெனில், ”அவர்களது அறிக்கை உலகெங்கும் சென்றடைகின்றது. அவர்கள் கூறும் செய்தி உலகின் கடையெல்லைவரை எட்டுகின்றது.”

**பதில்பாடல் :** படைப்புக்களின் அறிக்கை உலகெங்கும் சென்றடைகிறது.

## நற்செய்தி : மத்தேயு4 : 18 - 22

அக்காலத்தில் இயேசு கலிலேயக் கடலோரமாய் நடக்கும்போது, சகோதரர் இருவரைக் கண்டார். ஒருவர் பேதுரு எனப்படும் சீமோன், மற்றவர் அவர் சகோதரரான அந்திரேயா. மீனவரான அவ்விருவரும் கடலில் வலைவீசிக் கொண்டிருந்தனர்.இயேசு அவர்களைப் பார்த்து, ”என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்” என்றார்.உடனே அவர்கள் வலைகளை விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள்.அங்கிருந்து அப்பால் சென்றபோது வேறு இரு சகோதரர்களைக் கண்டார். அவர்கள் செபதேயுவின் மகன் யாக்கோபும் அவர் சகோதரரான யோவானும் ஆவர். அவர்கள் தங்கள் தந்தை செபதேயுவுடன் படகில் வலைகளைப் பழுது பார்த்துக்கொண்டிருந்தார்கள். இயேசு அவர்களையும் அழைத்தார்.உடனே அவர்கள் தங்கள் படகையும் தந்தையையும் விட்டு விட்டு அவரைப் பின்பற்றினார்கள்.

**தியானம் :** இறைமகன் இயேசு இவ்வுலகுக்குக் கொண்டு வந்த நற்செய்தியை உலகத்தின் கடையெல்லைவரை கொண்டு சேர்க்கவேண்டிய பொறுப்பு திருமுழுக்குப் பெற்றுத் தம்மைத் தாமே கிறிஸ்தவர்கள் என அழைத்துக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை இன்றைய இறைவார்த்தைகள் நமக்கு நினைவுபடுத்தி நிற்கின்றன. நற்செய்தி அறிவிப்பு என்பது ஒரு சிலருக்கு மட்டும் கொடுக்கப்பட்ட அழைப்பு என்பது பெரும்பாலான நம்மவரின் எண்ணமாகும். இந்த அழைப்பு செயற்பாட்டளவில் வேறுபடலாம். அதை எமது தாய்திருச்சபை மிக அழகாக வகைப்படுத்தி நமக்குத் தந்திருக்கின்றாள். திருத்தந்தையின் தலைமையில் ஆயர்கள், குருக்கள், துறவிகள் எனப் பலரும் பல வழிகளிலும் இப்பணியைச் சிறப்புறச் செய்து வந்ததினாலேயே இன்றும் இவ்வுலகில் நாம் கிறிஸ்துவை அறிந்துகொள்ளவும், அவர் படிப்பினைகளின்படி வாழவும் முடிகின்றது. தேவ அழைத்தல் மிகவும் அருகிவரும் இந்நாட்களில் தேவ அழைத்தல் பெருக நாம் தொடர்ந்து அறுவடையின் ஆண்டவரை மன்றாட வேண்டியது மிகமிக அவசியமானதாகும். எனினும், திருமுழுக்குப் பெற்ற நாம் ஒவ்வொருவரும் நம் சொல்லாலும், செயலாலும்: நமது இல்லங்களில், வேலைத்தளங்களில், சமூகத்தில் நற்செய்தி அறிவிப்பாளர்களாக நிட்சயம் மாறமுடியும். நற்செய்தி அறிவிப்பு என்பது வெறுமனே போதனை செய்வதும், மதமாற்றம் செய்வதும் அல்ல. அது மனங்களை மாற்றும் செயல். நமது நற்செயல்களை மற்றவர்கள் அடையாளம் கண்டுகொள்ளும் வேளைகளில், அச்செயல்களை நம்மைச் செய்யத் தூண்டிய நற்செய்தியையும், அந்த நற்செய்திக்குக் காரணரான கிறிஸ்துவையும் நாம் மற்றவர்களுக்கு அடையாளம் காட்ட முடியும். அதுவே, உண்மையான, உயிருள்ள சாட்சியமாகவும் அமையமுடியும்.